**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

******************

**<u>ஊடக அறிக்கை</u>**

## அயல் நாடுகளுக்கான கொவிட் தடுப்பூசி விநியோகத்தை ஆரம்பித்த இந்தியா

1. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதற்காக அயல் மற்றும் முக்கிய நட்பு நாடுகளிலிருந்து இந்திய அரசுக்கு பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. இந்த கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாக , இந்தியாவின் தடுப்பூசி உற்பத்தி மற்றும் விநியோகத் திறனைப் பயன்படுத்துவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டுக்கு அமைவாகவும் , கொவிட் தொற்றுநோயை எதிர்த்துப் போராட அனைவருக்கும் உதவும் வகையிலும் , பூட்டான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், மியன்மார் மற்றும் சிஷெல்ஸ் ஆகிய நாடுகளிற்கான தடுப்பூசி விநியோகப் பணிகள் 20 ஜனவரி 2021 முதல் ஆரம்பமாகிறது . இலங்கை, ஆப்கானிஸ்தான் மற்றும் மொரீஷியஸ் ஆகிய நாடுகளுக்கான விநியோகப் பணிகளை ஆரம்பிக்க முன்னர் அந்நாடுகளுக்கு தடுப்பூசிகளை வழங்குவதற்கு தேவையான ஒழுங்குமுறை அனுமதிகளை குறித்த நாடுகள் உறுதிப்படுத்தும் வரையில் இந்தியா காத்திருக்கின்றது.

02. ஏனைய நாடுகளைப் போலவே , சுகாதார சேவை வழங்குநர்கள் , முன்னரங்க ஊழியர்கள், மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களை உள்ளடக்கும் வகையில் இந்த நோய்த்தடுப்பு திட்டம் இந்தியாவில் கட்டம் கட்டமாக செயல்படுத்தப்படுகிறது .

உள்நாட்டுக்குத்தேவையான தடுப்பூசிகளை படிப்படியாக வழங்குவதை கருத்தில் கொண்டு, நட்பு நாடுகளுக்கு COVID-19 தடுப்பூசிகளை இந்தியா தொடர்ந்து வரும் வாரங்கள் மற்றும் மாதங்களில் ஓர் அட்டவணையின் கீழ் தொடர்ந்து வழங்கும் . வெளிநாடுகளுக்கு தேவையான தடுப்பூசிகளை விநியோகம் செய்யும் நிலையில் உள்நாட்டு தேவையினை பூர்த்தி செய்துகொள்வதற்கு போதுமான இருப்பினை உள்நாட்டு உற்பத்தியாளர்கள் கொண்டிருப்பார்கள் என்பதும் உறுதி செய்யப்படும்.

03. தடுப்பூசிகள் விநியோகிக்கப்படுவதற்கு முன்னர் , 2021 ஜனவரி 19-20 ஆகிய திகதிகளில் நோய்த்தடுப்பு முகாமைத்துவத்தினர் , தடுப்பூசிகளுக்குரிய குளிரூட்டியுடனான விநியோக பிரிவினர், தகவல் தொடர்பு அதிகாரிகள் மற்றும் மருந்தினைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளின் அதிகாரிகள் , உள்ளிட்டோருக்கு தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

04. COVID19 தொற்றுநோய் பரவிய காலப்பகுதிகளின்போது hydroxychloroquine, Remdesivir and paracetamol மாத்திரைகள் மற்றும் நோய் நிர்ணய கருவிகள் , வென்டிலேட்டர்கள், முககவசங்கள், கையுறைகள் மற்றும் பிற மருத்துவ பொருட்களை இந்தியா ஏராளமான நாடுகளுக்கு வழங்கியிருந்தது.

05. பல அயல் நாடுகளின் மருத்துவ திறன்களை மேம்படுத்துவதற்கும் பலப்படுத்துவதற்கும் மருத்துவ சிகிச்சைகளை விரைவுபடுத்துவதற்கான ஒத்துழைப்பு (PACT) திட்டத்தின் கீழ், இந்தியா பயிற்சி அளித்துள்ளது. இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு (ITEC) திட்டத்தின் கீழ் நட்பு நாடுகளின் சுகாதாரப்

பணியாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்காக தனித்தனியாக பல பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு அதன் மூலமாக தொற்றுநோயைக் கையாள்வதில் எங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள முடிகின்றது.

06. தற்போது நடைமுறையில் உள்ள முயற்சியாக இந்தியா உலகெங்கிலும் உள்ள நாடுகளுக்கு தடுப்பூசிகளை தொடர்ந்து வழங்கும் . இது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான GAVI இன் உடைய Covax வசதிகள் உள்ளடங்கலாக உள்நாட்டு தேவைகள் மற்றும் சர்வதேச தேவை மற்றும் கடப்பாடுகளுக்கு எதிராக அளவீடு செய்யப்படும்.

Source:https://mea.gov.in/press-releases.htm?dtl/33399/Supply_of_Indian_manufactured_vaccines_to_neighbouring_and_key_partner_countries

**************

கொழும்பு

19 ஜனவரி 2021